தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY

(With UGC 2(f) & 12(B) status and NAAC Accredited with 'A' grade in 1st cycle)

(Established under Tamil Nadu Act 33 of 2008)

Gangai Amman Kovil Street, Karapakkam, Chennai – 600 097


**No. TNTEU/Admin/2024/** 01753 **Date: 20.11.2024**

**Dr.K.Rajasekaran, Ph.D.,**
Registrar i/c

பெறுநர்:

முதல்வர்கள் / செயலர்கள்,

இணைவுப்பெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகள்,

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

அய்யா/அம்மையீர்,

பொருள்: அய்யன் திருவள்ளுவரின் 133 அடி திருவுருவச்சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு – கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டு நாட்கள் வெள்ளி விழா 31.12.2024 மற்றும் 01.01.2025 – திருக்குறள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கல்லூரிகளில் நடத்துவது – தொடர்பாக.

பார்வை: உயர்கல்வித் (ஏ2) துறை, தலைமைச் செயலகத்தில் இருந்து பெறப்பட்ட கடித எண்.2161/ஏ2/2024-1, நாள் 07.11.2024

*****

மேற்காண் பார்வையில் குறிப்பிட்டுள்ளவாறு திருவள்ளுவரின் 133 அடி திருவுருவச்சிலை கன்னியாகுமரியில் நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெறவுள்ள நிலையில் அதற்கான வெள்ளிவிழா கொண்டாட்டம் வருகின்ற ஜனவரி முதல் வாரத்தில் இரண்டு நாட்கள் கொண்டாடுவது குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

எனவே கல்லூரி முதல்வர்கள் திருக்குறளின் பெருமையினை மாணாக்கர்கள் வெளிப்படுத்தும் வகையில் மீக்குறும்படங்கள் திரைச் சுருளைகள் எண்ணிம செயற்கை நுண்ணறிவு வாயிலாகத் திருக்குறளின் சிறப்பினை உணர்த்தும் ஓவியப் போட்டிகள் (Oil Paintings, Graphics, Arts) நடத்தப்பட வேண்டும். மேலும் டிசம்பர் 31, 2024 மற்றும் ஜனவரி 1, 2025 ஆகிய நாட்களில் நடைபெறும் வெள்ளிவிழா நிகழ்ச்சிகளை கல்லூரிகளில் ஒளிபரப்பு செய்தல் வேண்டும். மேலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்களைத் இத்துறைக்கு அனுப்புமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

K. R... 20/11/2024

பதிவாளர் (பொ)